# ஐ. எம். எவ்.வின் இலங்கை விஜயம் ஒத்திவைப்பு

(கொழும்பு)
இலங்கை வரவிருந்த சர்வ தேச நாணய நிதியக்குழு (ஐ. எம். எவ்) தனது விஜய த்தை திடீரென ஒத்திவைத் துள்ளது. இலங்கையில் தற்போது (3-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 30 இதழ் 87
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 13 — 05 — 1993


## கண்ணிவெடியில் சிக்கி
# ஜீப் வண்டி சிதறியது 5 இராணுவம் காயம்

(கொழும்பு)
மன்னாரில் விடுதலைப் புலி களின் கண்ணிவெடித் தாக்கு தலினால் ராணுவத்தினரின் ஜீப்பொன்று முற்றாக சேத மடைந்ததாக கூட்டுப்படை தலைமையகம் தெரிவித்துள் ளது. (4ம் பக்கம் பார்க்க)

## பிரேமா கொலை:
# பொலிஸ் விசாரணையில் ஐ. தே. க. வேட்பாளர்

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் கொலை தொடர்பாக ஐ. தே. க வின் மாகாணசபைத் தேர்தல் வேட்பாளர் ஒருவர் பொலி சாரால் கைது செய்யப்பட்டு (4-ம் பக்கம் பார்க்க)

## ● கொழும்பில் பரபரப்பு
# பம்பலப்பிட்டி பகுதியிலிருந்து கிளேமோர் கண்ணிவெடி மீட்பு

## இராணுவம் செயலிழக்கச் செய்தது

(கொழும்பு)
பம்பலப்பிட்டி ரயில் நிலையத்திற்கு அருகில் வீதியோரத்திலிருந்து சக்திமிக்க கிளேமோர் அமுக்க கண்ணிவெடி ஒன்றை நேற்று பிற்பகல் பொலிஸார் கண்டு பிடித்து பின் இராணுவத்தின ரின் உதவியுடன் அதனை செயலிழக்கச் செய்தனர்.

பம்பலப்பிட்டி கடற்கரை வீதியில் பாதசாரி ஒருவர் இதனைக் கண்டு பொலிஸா ருக்கு அறிவித்துள்ளார். பொலிஸார் இராணுவத்திற்கு அறிவித்ததையடுத்து இராணுவம் அவ் விடத்திற்கு விரைந்தது. உடனடியாக சுமார் 4 கிலோ எடை யுள்ள இந்த கிளேமோர் அமுக் கக்கண்ணிவெடியை உடனடி (4-ம் பக்கம் பார்க்க)

# கொழும்பு நகரின் பாதுகாப்பில் மாற்றம்

(கொழும்பு)
கொழும்பு நகரின் பாது காப்பில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தத் தீவிர ஆலோ சனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார். அண்மைக்கால சம்பா (4-ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி மீது ஹேமா சீற்றம்
## ஐ. தே. க.வில் பிளவு ஏற்படலாம்

(கொழும்பு)
புதிய ஜனாதிபதி விஜயதுங்க மீதும், அமைச்சரவை மீதும் திருமதி ஹேமா பிரேமதாசா சீற்றமடைந்துள்ளாராம்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மேலும் பல பிளவு கள் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிகிந்தலையில் இடம்பெற விருந்த கம் உதாவ நிகழ்ச் சியை இரத்துச் செய்துவிட்டு மறைந்த ஜனாதிபதி பிரேமதா சாவிற்கு போதி பூசை நடாத் துவதற்கு தீர்மானிக்கப்பட் டுள்ளதாம்.

புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க கம் உதாவவில் பங்கு பற்றாமல் இருப்பதற்கே இந்த முடிவு எடுக்கப்பட்டுள் ளதென்று 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதி, அமைச்சர்கள் (4ம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. தோற்றால் ஹேமா பிரகாசிப்பார்

(கொழும்பு)
எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே. கட்சி தோல்வியுறுமானால் ஜனாதி பதி டி. பி. விஜயதுங்காவின் பதவிக்கே ஒரு ஆட்டமேற் படுமெனவும் இதனால் திருமதி ஹேமா பிரேமதாசாவுக்கும் அரசியலில் நுழைய வாய்ப்பு ஏற்பட்டுவிடும் எனவும் பி பி.சியின் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-ம் பக்கம் பார்க்க)

# சந்திரிகாவுக்கு கொலை மிரட்டல்

(கொழும்பு)
எதிர்க்கட்சி தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக் காவின் மகள் திருமதி சந்தி ரிகா குமாரணதுங்காவிற்கு கொலைப்பயமுறுத்தல் விடுக் கப்பட்டுள்ளது.

இது பற்றி பொலிஸ்மா அதி பருக்கும், கறுவாக்காட்டுப் பொலிசாருக்கும் அவர் முறைப் பாடு செய்துள்ளார். தன்னை அரசியலிலிருந்து அப்புறப் படுத்தவே இந்த கொலை (3-ம் பக்கம் பார்க்க)

# விருது வாய்ப்பை ஜனாதிபதி இழந்தார்

(கொழும்பு)
தேசிய வீரர் விருதைப் பெறும் வாய்ப்பை ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா இழந் துள்ளார்.

கல்விமான்கள் அறிவாளி கள் மற்றும் உயர்பதவிகளை வகிப்போரை கௌரவிக்கும் முகமாக வருடாந்தம், ஜனாதி 3-ம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தல்:
# ரி. வி., வானொலி பிரசாரம் எதிரணிக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)
எதிர்வரும் மாகாணசபை தேர்தலின் பிரசார வேலை கட்கு ஐ. தே. கட்சிக்கு கொடுக்கும் வாய்ப்பை தங்க ளுக்கும் தருமாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திசநாயக்கா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத் தில் கேட்டபோது அதற்கு மறுப்பக் நியாயம் கூறப்பட் டுள்ளதுடன் அதற்கு மறுப்பும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-ம் பக்கம் பார்க்க)

# மேலும் 800 பேர் பல்கலைக்குத் தெரிவு

(கொழும்பு)
1991ம் ஆண்டு க. பொ. த. உயர்தர பரீட்சையில் சித்தி யடைந்து பல்கலைக் கழக அனுமதி பெறத் தகுதியான வர்களில் 800 பேர் மேலதிக மாக சேர்த்துக்கொள்ளப்பட வுள்ளதாக கூறப்படுகிறது.

நீதிமன்றத்தீர்ப்பை அடுத்து (4-ம் பக்கம் பார்க்க)

## ★ அடுத்த முதலாம் திகதி முதல்
## அரச ஊழியர், ஓய்வூதியர்களுக்கு
# ரூ. 600 அலவன்ஸ் கிடைக்கும்

(கொழும்பு)
எதிர்வரும் யூன் முதலாம் திகதி தொடக்கம் சகல அர சாங்க ஊழியர்களுக்கும், ஓய் வூதியம் பெறுவோருக்கும் மாதாந்தம் 600 ரூபா மேல திக கொடுப்பனவு (அல வன்ஸ்) வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்ட சுற்று நிரு பத்தின் யூன் மாதம் 1-ம் திகதி தொடக்கம் ரத்துச் செய்யப்படும் சகல தற்காலிக, அமைய நாட்சம்பள, பதில் கடமையாற்றும் ஊழியர்க ளும் இந்த கொடுப்பனவுக்கு உரித்துடையவர்கள். இவர் கள் வேலை செய்யும் நாட் களுக்கேற்ப அந்தக் கொடுப் பனவு கணிக்கப்படும். [4-ம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சியில்
# விமானத்தாக்குதல் இளம் பெண் பலி

(கிளிநொச்சி)
ஸ்ரீலங்கா வான் படையின் குண்டு வீச்சு விமானங்கள் நேற்று கிளிநொச்சிப் பகுதி யில் நடத்திய குண்டு வீச்சில் இளம் பெண் ஒருவர் பலி யானார்.

நேற்றுக்காலை 9-30 மணி யளவில் கிளிநொச்சிப் பகுதி யைச் சுற்றி வட்டமிட்ட "எவ்-7" ரக மிகை ஒலிவேக தாரை விமானங்கள் கனக புரம் பகுதியில் குண்டுவீச்சை (3-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### வகுப்புகள்

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் யாழ். முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. ஆண்டு 5 தர இட மாணவர்களுக்கு சனி, ஞாயிறு நாட்களில் புலமைப் பரிசில் Paper Class ஆரம்பமாயுள்ளது. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இ-97)

## கோழிகள் திருட்டு

(நவாலி)

நவாலியில் கடந்த இரு தினங்களில் 17 கோழிகள் திருடப்பட்டுள்ளன.

கடந்த வாரம் நள்ளிரவு வேளை நவாலி சின்னப்பா வீதியிலுள்ள கனகரத்தினம் என்பவரது வீட்டில் கூட்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 8 கோழிகளும் அதே இடத்தில் மற்றொரு வீட்டில் 9 கோழிகளும் திருடப்பட்டுள்ளது 71

## M. Sc. IN BIOTECHNOLOGY

Gradutes in Chemical, Biologial, Medical, Dental, Veterinary Agricultural and Engineering Sciences will be considered. Forward application with Biodata. All applicants will be required to sit for a qualifing examination and a viva. Address Correspondence to Registrar, University of Jaffna.

Closing date: 1993 05-31

Registrar

UNIVERSITY OF JAFFNA
1993-05-10.

(A-3120)

## இன்று

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் இன்று பகல் 10 மணி முதல் 12 வரை பாடசாலை அதிபர் திரு பொ. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் சாவரம் இதழ் இலக்கிய நிகழ்வில் "உதயத்தின் கதிர்களை உள்ளே வரவிடுங்கள் என்ற தலைப்பில் செல்வி வே. அருந்ததி கலந்து கொண்டுசிறப்புரையாற்றுவார்.

## இராசி பலன்

### 13-05-1993

### வியாழக்கிழமை

### (தமிழுக்கு சித்திரை 30)

ஸப்தமி காலை 7-52 வரை திருவோணம் மு. ப. 9-17 வரை சித்தயோகம் இராகு காலம் பகல் 1-24 முதல் 2-54 வரை சுபநேரம் காலை 7-24 முதல் 8-54 வரை.

மேடம்: புதிய முயற்சி, சயனசுகம், காரிய அனுகூலம்

இடபம்: பெண்மூலம் உபத்திரவம், பயணத்தடை, அலைச்சல்

மிதுனம்: பணநஸ்டம், தொழில் விக்கினம், மனவேதனை.

கடகம்: மனைவி நன்மை, தனலாபம், புதிய ஸ்தானம்.

சிங்கம், சத்துருநாசம், தொழில் செல்வாக்கு, மனமகிழ்ச்சி.

கன்னி: உடல் நலம் குன்றுதல். தாழ்ந்தநிலை, வெறுப்பு.

துலாம்: குடும்பபிரிவு, தனிமை வாசம், காரிய விக்கினம்.

விருச்சிகம்: தொழில் மேன்மை, சுபகாரியம்வெற்றி வாய்ப்பு.

தனுசு: தொழில் பிணக்கு, அவநம்பிக்கை, வயிற்றுவலி.

மகரம்: சகோதர உதவி, குடும்ப அனுகூலம், பணவரவு

கும்பம்: திருடர்பயம், இனசன வெறுப்பு, அவநம்பிக்கை.

மீனம்! தாயின் யோசனை, தெய்வதரிசனம், அதிகசெலவு

— ஜோஸ்யர்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

இப்பல்கலைக்கழகத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து 1993-06-14 ம் திகதிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்

பதவி: பாதுகாப்புச் சேவகர் (தாழ்தரம்)

சம்பளத் திட்டம்:
ரூபா 2310 – 8x40–2630/- மாதமொன்றுக்கு (1993-07-01 ஆம் திகதியிலிருந்து)

(இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச்செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் வழங்கப்படும்)

தகைமைகள்

1. எட்டாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்
2. விளையாட்டிலும் சமூக சேவையிலும் தீவிரமாகப் பங்கு பற்றியிருத்தல் வேண்டும்.
3. உயரம்: 5 அடி 6 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
   மார்பு! சாதாரண நிலையில் 32 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
4. வயது: விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

தெரிவு: பொதுவுளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை ரூபா 20/- ஐ நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தாபனக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தபால்மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெறவிரும்புவோர், அதற்கானவேண்டுகோளுடன் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் 23 x 10ச. மீ. அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும் ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பமுடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும், இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையிலிருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

— பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-05-11 (எ 3123)

## அரியாலை ஐக்கிய விளையாட்டு கழகம் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் 8ம், 9ம் திகதிகளில் நடைபெற்ற நல்லூர் பிரதேச செயலகத்தின் ஆள்புலத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஆண், பெண் இரு பிரிவிலும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனாகியது.

ஆண்களில் 2ம், 3ம் இடங்களை முறையே அரியாலை சாந்தி விளையாட்டுக் கழகமும் பொற்பதி விளையாட்டுக் கழகமும், பெண்களில், நாதேண் விளையாட்டுக் கழகமும், பொற்பதி விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

சிறந்த வீரனாக பொற்பதி வி. கழகத்தைச் சேர்ந்த திரு. கணேசராசாவும் சிறந்த வீராங்கனைகளாக கெ. கெனிலா, எஸ். சுமித்திராவும் தெரிவு செய்யப்பட்டனர். (161)

## நிவாரண முத்திரை

(மானிப்பாய்)

நவாலி ஆனைக்கோட்டை மானிப்பாய் பகுதி கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரண முத்திரைகள் அவ்வப்பகுதி கிராம சேவையாளர்களினால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (71)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கம்பன் கழகத்தினால் கௌரவிக்கப்பட்ட பண்டிதர் பொன்னுத்துரைக்கு கடந்த 9ம் திகதி மட்டுவிலில் சனசமூக நிலையத் தலைவர் திரு. க. விக்னேஸ்வரன் தலைமையில் ஒரு பாராட்டு விழா நடத்தப்பட்டது.

## மெய்வல்லுனர் போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுத்துறை கொத்தணிப் பாடசாலைகள் மட்டத்திலான மெய்வல்லுனர் போட்டி அண்மையில் உடுத்துறைக் கொத்தணி அதிபர் தி. ந. அரியரத்தினம் தலைமையில் தாளையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமைதானத்தில் நடைபெற்றது.

மெய்வல்லுனர் போட்டிக்கு தாளையடி பங்குத்தந்தை அருட்திரு ம. டேவிட் அடிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். (173)

## மாதாந்த உதவிப்பணம்

(மானிப்பாய்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான ஜனவரி மாதத்திற்குரிய பணம் தற்போது கிராமசேவை அலுவலர்கள் மூலம் வழங்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது பகுதி கிராமசேவை அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (71)

## விளையாட்டுப் போட்டி

[தாளையடி]

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. எல்லே போட்டியில் தாளையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

உதைபந்தாட்டப் போட்டியில் நாகர்கோவில் தெற்கு வெண்மதி விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

பெண்கள் பிரிவில் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போட்டிகளில் தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. [163]

## அச்சுவேலி மகாவித்தியாலயம்

## வாழ்த்துகின்றது



### உயர்திரு

### இராமுப்பிள்ளை சுந்தரலிங்கம்

(யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர்)

மணிவிழாக்கண்ட யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தமிழீழத்தின் கல்விக்கு தொடர்ந்து பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள், ஊழியர்
பாடசாலை அபிவிருத்திச் சபை
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
நலன் விரும்பிகள்

(இ-102)

## அறிவித்தல்

### வேலணை

### பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

### 1993-03-31-ந் திகதி முடியவுள்ள

### வாக்காளர் இடாப்பு

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 31-03-1993-ந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, வோணுந்தோட்ட வீதி, ஆகிய இடங்களில் அமைந்துள்ள தற்காலிக நிவாரணக் கிளைகளில் அங்கத்தவர்களின் பார்வைக்காக (10-05-1993-ம் திகதி தொடக்கம் 21-05-1993-ம் திகதி வரையான காலப் பகுதி) வாக்காளர் பட்டியல் வைக்கப்பட்டுள்ளன. வாக்காளர் பட்டியல் தொடர்பான ஆட்சேபனைகள் ஏதும் இருந்தால் 21-05-1993-ம் திகதி தொடக்கம் 31-05-1993 வரையான காலப்பகுதிக்குள்

செயலாளர்,
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி

செயலாளர்,

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(ஏ-3122)

பிரதமர் ரணில் கலந்துகொண்ட கூட்டத்தில்

# துப்பாக்கியுடன் நடமாடிய சிங்கள இளைஞர் ஒருவர் கைது

(கொழும்பு)

தங்காலையில் இடம்பெற்ற ஐ. தே. க. தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உரையாற்றிக் கொண்டிருந்தபோது துப்பாக்கியுடன் நடமாடிய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உரையாற்றிக் கொண்டிருந்தபோது சந்தேகத்திற்கிடமான முறையில் கூட்டமேடை அருகே இளைஞர் ஒருவர் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தார்.

இவரது நடமாட்டத்தில் சந்தேகமடைந்த பொலிசார் இவரைக் கைது செய்து சோதனை நடத்தியபோது இவரிடமிருந்து துப்பாக்கி ஒன்றும் சில துப்பாக்கி ரவைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட இந்த இளைஞர் வலல்முல பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (மி)

## அரசியலுக்கு வருமாறு அழைப்பு

# முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். மறுப்பு

(கொழும்பு)

மீண்டும் அரசியலில் ஈடுபடத் தனக்கு விடுக்கப்பட்ட அழைப்பைத் தான் நிராகரித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மீண்டும் அரசியலில் ஈடுபடும் நோக்கம் எனக்கில்லை. ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சுதந்திர கொள்கையையும் ஜனநாயக சுதந்திரத்தையும் பாதுகாக்கவேண்டிய அவசியத்தை நன்கறிவர் என்றும் அவர் கூறினார். (ரி)

த. பொ. க. தேர்வில்

# விஞ்ஞானம் செயன்முறை தேர்வு நடத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் நடைபெறவிருக்கும் த. பொ. க. தேர்வின் ஒரு பகுதியாக விஞ்ஞான பாடத்தில் செயன்முறைத் தேர்வு நடாத்தப்படும்.

கடந்த காலங்களில் யாழ். மாவட்டப் பொதுத்தேர்வின் போது ஆண்டு 7 முதல் 10ம் வகுப்புவரை நடுவருடத் தேர்வின் ஒரு பகுதியாக நடைபெற்றதுபோன்ற நிலைத் தேர்வு முறையில் இத்தேர்வு நடாத்தப்படும்.

தேர்வு நாடிகள் ஒவ்வொருவரும் தேர்வு நிலையத்தில் ஒழுங்கு படுத்தப்பட்ட 10 அமைப்புக்களில் தாங்களாகவே விஞ்ஞானச் செயன்முறைகளில் ஈடுபட்டு வழங்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிப்பர்.

விஞ்ஞானச் செயன்முறைத் தேர்வும் அறிமுறைத் தேர்விலும் பெற்ற புள்ளிகள் ஒன்றுக்கப்பட்டு விஞ்ஞான பாடத்திற்கான இறுதி மதிப்பெண்கள் வழங்கப்படும்.

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் எழுத்துத் தேர்வு செப்டம்பர் மாத இறுதி ஒக்டோபர் முதல் வாரத்தில் நடைபெறும் விஞ்ஞானபாட செயன்முறைத்தேர்வு ஒக்டோபர் மாதம் மூன்றும் வாரத்தில் வட தமிழீழம் எங்கும் நடைபெறும் 100 தேர்வு நிலையங்களில் அண்ணளவாக 25,000 பரீட்சார்த்திகளுக்கு இரு தினங்களில் நடாத்தி முடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## இலவச நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலய பங்கைச் சேர்ந்த மக்களுக்கும்புனித அந்தோனியார் புனித யாகப்பர் புனித மேரி மாதா ஆலய பங்கைச் சேர்ந்த மக்களுக்கும் அண்மையில் அரிசி, மா, சீனி, பாமா போன்ற பொருட்கள் நிவாரணமாக வழங்கப்பட்டது.

அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலய பிதா பேனுட் றெக்னோ தலைமையில் மேற்படி நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது. (க)

## நாய்களுக்கு தடுப்பூசி

(உடுவில்)

நவாலி பகுதியில் வீட்டு வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசி இன்று 13ம் திகதி வியாழக்கிழமை போடப்பட உள்ளது.

காலை 8 30 மணிக்கு நவாலி அரசடியிலும், பகல் 10-30 மணிக்கு நவாலி முருகமூர்த்தி கோயிலடியிலும் இத்தடுப்பூசிகள் போடப்படும். (109)

## சுகாதார கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சுகாதார நிலையம் நடாத்தும் 2-வது கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர். சீர்மாறன் தலைமையில் நடைபெறும் மேற்படி கருத்தரங்கில் பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம், வைத்தியகலாநிதி திருமதி வி. எம். கருணாரன், வைத்தியகலாநிதி ஆர். தெய்வேந்திரன், வைத்தியகலாநிதி என். சிவராசா, வைத்தியநிபுணர் எஸ். ஆனந்தராஜா ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளார்கள். (வி)

மட்டக்களப்பில்

# ராணுவ காவலரண் அருகில் வெடிகுண்டு மீட்பு

(மட்டுநகர்)

மட்டக்களப்பு இராணுவ முகாம் காவலரண் அருகே வெடிகுண்டு ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

இக்குண்டு யாரால் வைக்கப்பட்டது என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இக்குண்டு கண்டெடுக்கப்பட்டபின் இராணுவத்தினரால் வெடிக்க வைக்கப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (மி)

தேர்தலில் வாக்களிக்கும்

## அரச ஊழியர்களுக்கு

# சம்பளத்துடன் லீவு

(கொழும்பு)

எதிர்வரும் 17ம் திகதி நடைபெறும் மாகாணசபைத்தேர்தலில் வாக்களிக்கச் செல்வதற்கு அரச ஊழியர்களுக்கு சம்பளத்துடன் லீவு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊழியர்களுக்கு குறைந்தது நான்கு மணித்தியாலங்கள் சம்பளத்துடன் லீவு வழங்கப்படவேண்டும். தூரத்தை பொறுத்து இக்காலம் அதிகரிக்கப்படலாம் அல்லது குறைக்கப்படலாம் இவ்வாறு லீவு வழங்கத் தவறின் வேலை கொள்வோர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு 500 ரூபா அபராதம் அல்லது ஒருமாதகால மறியல் அல்லது இரண்டும் வழங்கித் தண்டிக்கப்படுவர்.

இதேவேளை ஏழு மாகாண சபைகளுக்கு நடைபெறும் இத்தேர்தல்களுக்கு இன்னும் நான்கு தினங்களே இருக்கின்றன. இத்தேர்தலில் வாக்களிக்கும் அனைவருக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

மாகாணசபை தேர்தல்:

## பாதுகாப்பு கடமையில்

# 30,000 பொலிஸார்

(கொழும்பு)

எதிர்வரும் 17ம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத்தேர்தலில் 30 ஆயிரம் பொலிசார் பாதுகாப்புக்கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

தேர்தல் சமயத்தில் வன்முறைகள் ஏதும் இடம்பெறும் பட்சத்தில் அவற்றை உடனடியாகக் கட்டுப்படுத்தவே இம் மேலதிக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

விருது வாய்ப்பை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதியால் தேசிய விருதுவழங்கப்படுவது வழக்கம்

இம்மாதம் 22-ம் திகதி தேசிய வீரர்கள் தின விருது வழங்கும் வைபவத்தில், விருதுகளைப் பெறும் பெரியார்களை கடந்த மாதமே காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவு செய்திருந்தார் இப்பெயர் பட்டியலில் அப்போது பிரதமர் பதவியை வகித்த திரு. டி. பி. விஜயதுங்காவின் பெயரும் இடம் பெற்றிருந்தது.

தற்போது திரு. விஜயதுங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதனால் மேற்படி விருது இவருக்கு வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி-ஓ)

மாகாண சபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐ. தே. கட்சிக்கு கொடுக்கும் சமவாய்ப்பை றேடியோவிலும் ரி.வி யிலும் தங்களுக்கும் தருமாறு எதிரணியினர் அரசைகேட்ட போது அதற்கு சட்டத்தை காட்டி அரசு ஏமாற்றப்பார்க்கிறது.

திரு. காமினி திசநாயக்கா எழுதிய கடிதத்திற்கு ஜனாதிபதியின் செயலர் திரு. விஜயதாச எழுதிய பதிலில் ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்ற தேர்தல், பிரசாரங்களுக்கு றேடியோ, ரி. வி பயன்படுத்தலாம் என சட்டத்தில் கூறப்பட்டிருந்த போதிலும் மாகாணசபை தேர்தல் பிரசாரங்களுக்கு அவற்றை பயன்படுத்துவதற்கு விதிகள் இல்லை என எழுதியுள்ளார்.

ஆனால் திரு. காமினியோ மீண்டும் விடாமல் எழுதிய கடிதத்தில் இதே சட்டமே கடந்த மாகாண சபை, நாடாளுமன்றத் தேர்தலின் போதும் இருந்தது. அப்போது எதிரணியினருக்கு வானொலி, ரீ. வி யில் சம வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அப்படியாயின் ஏன் இப்போது கொடுக்கக்கூடாது ஐ. தே. கட்சி தனது பிரசாரத்திற்கு திரு. பிரேமதாசாவின் மறைவையும் பயன்படுத்தி வருகிறது என சொற்போர் தொடங்கியுள்ளார்.

சட்டத்தை காட்டி சமாளித்த ஜனாதிபதி செயலகம் தற்போது இதற்கு எப்படி மழுப்பல் நியாயம் கொடுக்கலாம்என மீண்டும் யோசித்து வருகிறது. (கே-சி)

## விவசாயிகளுக்கு மண்ணெண்ணை

(கொழும்புத்துறை)

பயறு, எள்ளு, கௌபி போன்ற சிறுதானியப் பயிர்களை உற்பத்தி செய்துள்ள யாழ் பிரதேசச் செயலாளர் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு மட்டும் இனிமேல் மண்ணெண்ணை வழங்கப்படவுள்ளதாக யாழ் பிரதேசச் செயலாளர் திரு. க. குணராசா தெரிவித்துள்ளார். (154)

கிளிநொச்சியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தின. இந்த விமானங்களிலிருந்து 4 குண்டுகள் வீசப்பட்டன.

இதன்போது செல்வாநகரைச் சேர்ந்த தங்கராசா நாகேஸ்வரி என்ற குடும்பப் பெண் பலியானர். மேலும் 5 பேர் படுகாயமடைந்தனர். பல கட்டிடங்களும் சேதமுற்றன. (கே-சி)

ஐ. எம். எவ்.வின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலவும் மே சமான சூழ்நிலையை அடுத்தே இம்மாத நடுப்பகுதியில் இங்கு வரவிருந்த இக்குழு மறு திகதி அறிவிக்காது தங்கள் விஜயத்தை ஒத்திவைத்துள்ளனர்.

ஜூன் மாதம் 16ம் திகதி நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் சமர்ப்பிப்பதற்காக இறுதி அறிக்கையை தயாரிக்கும் நோக்கிலேயே "ஐ எம். எவ்" குழு கொழும்பு வரவிருந்தது. (சி)

சந்திரிகாவுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சி நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினர்.

இதற்கு முன்னோடியாக கம்பஹா மாவட்டத்தில் தங்கள் கட்சிப் பிரமுகர் ஒருவரை பொலிஸ் அதிகாரி ஒருவர் கடத்திச் சென்றுள்ளதாகவும் தான் பங்கு பற்றும் கூட்டங்களுக்கு அநாமதேய குழுவினர் வருகை தருவதாகவும் கூறியுள்ளார்.

இப்படியான தேர்தல் ஊழல்களை அரசாங்கம் மே மாதம் 17ம் திகதி வரையில் நடாத்த உத்தேசித்துள்ளதாகவும் சந்திரிகாகுற்றம் சாட்டினர். (சு-சி)

வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக

விடுதலைப் புலிகளின் மாணவரமைப்பு

நடாத்தும்

# கலை நிகழ்ச்சி

| கல்விக் கோட்டம் | நடைபெறும் இடம் | காலம் | நேரம் |
| --- | --- | --- | --- |
| மருதனார்மடம் | யா/இராமநாதன் கல்லூரி | 14-05-93 (வெள்ளி) | இரவு 7 மணி |
| பண்டத்தரிப்பு | யா/வட்டு. திருஞான சம்பந்த வித்தியாலயம் | 15-05-93 (சனி) | இரவு 7மணி |

<> நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்

அன்பளிப்பு:- 5 ரூபா, 10 ரூபா, 15 ரூபா

அனைவரது ஆதரவினையும் அன்புடன் வேண்டுகிறோம்

(ஏ-3127)

★ தெற்கில் மாகாணசபைத் தேர்தல்:

# வன்முறை, தீவைப்பு, அடிதடி எதிரணியினர் மீது தாக்குதல்

(கொழும்பு)

தென்பகுதியில் மாகாண சபைத் தேர்தல் நெருங்க எதிரணியினருக்கு எதிரான ஆளும் கட்சியினரின் அடாவடித் தனங்கள் மோசமடைந்து வருவதாக பல புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தெற்கில் டி. யு. என். எவ். சுதந்திரக்கட்சி உட்பட எதிர்க் கட்சி வேட்பாளர்கள் பலரும் அவரது குடும்பத்தினர்களும், ஆதரவாளர்களும் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களது வீடுகளும் தீவைக்கப்பட்ட சம்பவங்கள் பலவும் இடம்பெற்றுள்ளன.

தாக்குதல், தீவைப்பு சம்பவங்கள் பலவற்றில் ஐ. தே. க. மாகாணசபை தேர்தல் வேட்பாளர்கள் பலரும் சம்பந்தப்பட்டிருப்பதாக பொலிசாருக்குப் பல புகார்கள் தெரிவிக்கப்பட்டபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையாம். (சி)

## தேர்தல் வன்முறை பற்றி 350 புகார்கள்

(கொழும்பு)

தேர்தல் சட்டங்கள் மீறப்படுவது தொடர்பாக 350 புகார்கள் பொலிஸ் தலைமையகத்துக்கு கிடைத்திருப்பதாக பொலிசார் தெரிவித்தனர்.

தேர்தல் சட்டமீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பொலிசார் விசாரணைகள் மேற்கொள்ளவுள்ளதாகக் கூறியுள்ளனர்.

எனினும் பொலிசாரின் அசமந்தப்போக்கு குறித்து எதிர்க்கட்சிகள் [illegible] தெரிவித்துள்ளன. (பி-சி)

### முடிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள பாடசாலைகளில் நிலவுகின்ற ஆய்வுகூட பணியாளர், நூலகப் பணியாளர், காவலாளர், பாடசாலைத் தொழிலாளர், சுகாதாரத் தொழிலாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகட்கு மாத்திரம் இம் மாதம் 31-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை "செயலாளர், கல்வி கலாச்சார விளையாட்டுத்துறை அமைச்சு, திருகோணமலை" என்ற விலாசத்திற்கு முடிவு திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக நேரடியாக அனுப்பி வைத்தல் வேண்டும். (இ)

● ராஜீவ் காந்தி கொலை:

## பாதுகாப்பு அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலையின் போது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது உடன் நடவடிக்கை எடுக்கும்படி தமிழக அரசை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

நேற்று மாநிலங்களவையில் உரையாற்றிய மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டசமயத்தில் அவருக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லையென்று இவ் வழக்கை விசாரித்த வர்மா கமிஷன் குறிப்பிட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார். (சு-சி)

### குமண வருகிறது

(திருநெல்வேலி)

குமணக் கப்பல் நாளை 14ம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறையை வந்தடையும் எனவும், குமண நேற்று கொழும்பிலிருந்து புறப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலில் தபால் பொதிகளும் பயிலுனர் ஆசிரியர்களுக்கான பரீட்சை வினாத்தாள்களும், மற்றும் அத்தியாவசியப் பொருட்களும் எடுத்து வரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (157-சி)

### மரண அறிவித்தல்

**திருமதி பரமேஸ்வரி இரத்தினசபாபதி**

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி இரத்தினசபாபதி 9-5-93 ல் கொழும்பில் காலமானார். அன்னார் திரு. செ. இரத்தினசபாபதி (ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி, புனர்வாழ்வுத் திணைக்களம்) அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம், மகேஸ்வரி, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வழக்கறிஞர் திரு சிவகணேசன் (லண்டன்), திரு. சிவஷண்முகம் (பொறியியலாளர், அபுதாபி), திருமதி சு. மல்லிகாதேவி, காலஞ்சென்ற இரகுநாதன் ஆகியோரின் அருமைத் தாயாரும், டாக்டர் திருமதி இ. கமலா (லண்டன்), திருமதி சி. மனோன்மணி ராஜி, அவுஸ்திரேலியா), திரு. குலராஜதேவா (விலை மதிப்பீட்டுத் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அருமை மாமியாரும், யசோதரன், பிரஷாந்தன், ஷர்மிளா ஆகியோரின் பேத்தியாரும், காலஞ்சென்றவர்களான திரு. வ. கி. தம்பிராசா, டாக்டர் வ. கி. சண்முகரத்தினம் ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

6/1B, லயாட்ஸ் வீதி,
கொழும்பு-5.

(ஏ-3126)

### பிரேமா கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரிக்கப்பட்டுள்ளார்.

பொலிசாரின் விசாரணைக்கு இருதினங்கள் உட்படுத்தப்பட்ட இவர் பின்னர் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை திரு. பிரேமதாசா கொலை தொடர்பாக மூன்று தமிழ் பெண்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (இ)

### அடுத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதிய பணிப்பாளரினால் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

புதிய தீர்மானம் பற்றி பொது நிர்வாக, மாகாண அமைச்சு உள்நாட்டு அமைச்சுகளின் செயலாளர் எம் எஸ். யுனேட் விளக்கிக் கூறுகையில்:

2000 ரூபாவுக்கு குறைவான மாதாந்த சம்பளம் பெறுவோருக்கு ஏற்கனவே இந்த 600 ரூபா கொடுப்பனவு கிடைக்கின்றது.

2000 ரூபாவுக்கும் 3000 ரூபாவுக்கும் இடைப்பட்ட மாதாந்த சம்பளம் பெறுவோருக்கும் இந்தக் கொடுப்பனவின் ஒருபகுதி மட்டும் தற்போது கிடைக்கின்றது.

மாதாந்தம் 260 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி எதிர்வரும் 1-ம் திகதி தொடக்கம் ஓய்வூதியம் பெறுவோருக்கும் வழங்கப்படும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

1987ம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவதற்கு முன்னர் ஓய்வூதியம் பெற்றவர்களும், 1600 ரூபாவுக்கு குறையாத மொத்த ஓய்வூதியம் பெறுபவர்களும் இதில் அடங்குவர்.

1988ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி தொடக்கம் 1992ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதிக்குமிடையில் ஓய்வுபெற்ற மாதாந்த மொத்த ஓய்வூதியமாக 2 973 ரூபாவுக்கு குறைவான ஓய்வூதியம் பெறுவோருக்கும் இந்த வாழ்க்கைச் செலவு படி கிடைக்கும்.

1993 ஜனவரி 1-ம் திகதிக்குப் பின்னர் இளைப்பாறிய அல்லது இளைப்பாற இருக்கும் ஓய்வூதியர்களுக்கு அவர்களதுமாதாந்த மொத்த ஓய்வூதியம் 4 060 ரூபாவுக்கு குறைவாக இருப்பின் இவர்களுக்கும் அடுத்த மாதம் 1-ம் திகதி தொடக்கம் 260 ரூபா மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படியைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவார்கள். (சு-சி)

## சிங்கராயரின் பூதவுடல் நேற்று அடக்கம்

(யாழ்ப்பாணம்)

காலஞ்சென்ற வண. பிதா சிங்கராயரின் பூதவுடல் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை இரவு மாரடைப்பால் காலமான வண சிங்கராயரின் பூதவுடல் முதலில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வீதியில் உள்ள அன்னாரின் சகோதரரின் இல்லத்தில் வைக்கப்பட்டு, பின் கொழும்புத்துறையில் உள்ள அர்ச். சூசையப்பர் தேவாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இதன்பின்பு வண. சிங்கராயரின் பூதவுடல் நேற்று யாழ். மரியன்னை தேவாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் இரங்கல் திருப்பலி பூசையுடன் பூதவுடல் மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (வி-சி)

வவுனியாவில்

## பாடசாலை மீது விமானத்தாக்குதல்

(வவுனியா)

வவுனியா மாவட்டம் மருதோடையில், சிறிலங்கா விமானப் படையின் புக்காரா விமானமொன்று சிறுவர் பாடசாலையொன்றை தாக்கியுள்ளது.

நேற்று முன்தினம் காலை 6-40 மணியளவில் நடத்தப்பட்ட இத் தாக்குதலில் இந்த சிறுவர் பாடசாலை பலத்த சேதமடைந்தது.

புக்காரா விமானத்திலிருந்து ரொக்கட் தாக்குதல் சுவிப் தாக்குதலும் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (கே-சி)

## 2 ஆசிரியர் உட்பட 6 தமிழர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பண்டாரியா வெளியில் ராணுவத்தினரால் ஆறு தமிழ் மக்கள் கைதுசெய்யப்பட்டு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட் கிழமை கைது செய்யப்பட்ட இவர்களில் இருவர் ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கே-சி)

## லலித்தின் சடலத்தில் 25 காயங்கள் இருந்தன

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலியின் சடலத்தில் வெளிப்புறக் காயம் பதினாறும், உள்காயம் ஒன்பதும் இருந்தது என்று வைத்திய அதிகாரி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இவருக்கு உள்காயங்களால் தான் மரணம் சம்பவித்தது என்று வைத்திய பரிசோதனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை அத்துலத் முதலியை கொன்றவர் என்று கூறப்படும் இளைஞனின் உடலில் 6 காயங்கள் இருந்தன அருகில் சயனைட் இருந்தது. இருந்த போதிலும் இவருக்கு காயங்களால்தான் மரணம் சம்பவித்துள்ளது. (சு-சி)

### கண்ணிவெடியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் கடந்த 2ம் திகதி நடந்ததாகவும் இதில் ஒரு உபபரிசோதகர் உட்பட 5 சிறிலங்கா ராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (கே-சி)

### ஐ. தே. க.

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பி. பி. சி. மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி பிரேமதாசா இறந்தவையோடு இரங்கலுரை ஆற்றிய திருமதி ஹேமா தனது கணவரின் பாதையில் தான் அடியெடுத்து வைக்கப் போவதாகவும் அதற்கு நாட்டு மக்களே பூரண ஆதரவு தருமாறும் வேண்டிக்கொண்டார்.

கடந்த இரண்டு வாரங்களில் கொழும்பு நகரில் நடந்த நிகழ்வுகள் ஐ. தே. கட்சியின் அத்திவாரத்தையே ஆட்டிப் படைத்துள்ளன. வரும் மாகாண சபை தேர்தலிலும் அக்கட்சிக்குக் கடும் போட்டி காணப்படுகிறது.

இப்படியான சூழலில் திருமதி ஹேமா பிரேமதாஸாவுக்கு அரசியலில் நுழையவும், தான் சொன்னதை செய்து காட்டவும் சந்தர்ப்பம் ஏற்பட்டு இலங்கை அரசியலில் அவருக்கு ஒரு இடம் கிடைக்க வாய்ப்புண்டு. (கே-சி)

### கொழும்பு நகரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகள் நகரின் பாதுகாப்பிற்குத் தொடர்ந்தும் அச்சுறுத்தலாக அமைவதால் நகரின் பாதுகாப்பில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாம்.

இதற்கான ஆலோசனைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

### மேலும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக் கழக அனுமதிமுறையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதால் இவ்வாறு மேலதிகமாக மாணவரை தெரிவு செய்யவேண்டி உள்ளதாம்.

இதற்கான விபரப்பட்டியல் விரைவில் தயாரிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (மீ-சி)

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக இராணுவ வெடிகுண்டு நிபுணர்கள் செயலிழக்கச் செய்தனர்.

இதையடுத்து பம்பலப்பிட்டிப் பகுதியில் படையினர் பலத்த தேடுதல் நடத்தினதாகவும் பின்னர் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. மேலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுமுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

### ஜனாதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீதான கோபத்தால் திருமதி ஹேமா பிரேமதாசா எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்களில் அக்கறை செலுத்தாமலிருக்கின்றாரென்றும் விக்டர் ஐவன் தெரிவித்தார். (சு-சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி, 18-ம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Srilanka under licence Number B/10486/B